**Judicial Form No.53.**

**{See Rule 42}**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Cr.P.C)

-----

IN THE COURT OF THE ADDITIONAL SESSIONS JUDGE, VIRUDHUNAGAR

| | | |
|---|---|---|
| Calendar .. .. | ) | |
| Miscellaneous .. .. | ) | **Sessions Case No. 52/2023** |
| Preliminary Register .. .. | ) | |
| Sessions .. .. | ) | |

| | | |
|---|---|---|
| | { | **Prosecution PW6** |
| Deposition of witness for PW. | { | Defence |
| | { | Court |

| | | |
|---|---|---|
| Name | : | சரவணன் |
| Husband's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(எதிரி ஆஜர் இல்லை, 317 கு.வி.மு.ச மனு அனுமதிக்கப்பட்டது)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 {Central Act 44 of 1969} on the **27th day of January 2026.**

முதல் விசாரணை **:** நான் சாத்தூர் நென்மேனியில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 1 ½ வருடத்திற்கு முன்பு நானும், எனது ஊரைச்சேர்ந்த மாரிமுதது என்பவரும் நென்மேனி பிள்ளையார்

கோவில் தெருவில் வேலம்மாள் வீட்டருகே சென்றுகொண்டிருந்தபோது, போலிசார் எங்களை நடந்த சம்பவத்திற்கு வரைபடம் தயாரிக்க வேண்டியிருப்பதால் சாட்சியாக இருக்குமாறு கூறினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வைமகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான் அது அ.த.சா.ஆ.**5**. என்னிடம் காண்பிக்கப்படும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான் அது அ.த.சா.ஆ**-6**. என்னிடம் காண்பிக்கப்படும் சுமார் **59** செ.மீ நீளமுள்ள இரும்பு தெருக்குழாய் பைப் சா.பொ.**1** ஆகவும்**,** என்னிடம் காண்பிக்கப்படும் சுமார் **23.5** செ.மீ நீளமுள்ள இரும்பு தெருக்குழாய் பைப் சா.பொ.**2** ஆகவும் என்னிடம் காண்பிக்கப்படும் சுமார் **8** செ.மீ இரும்பு நள்ளி ஒன்று சா.பொ.**3** ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது**.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

நீங்கள் கையொப்பம் போட்டேன் என்று சொல்லியுள்ள அந்த வரைபடம் வரைந்த ஆவணத்தில் நீங்களும், இன்னொரு சாட்சியும் கையொப்பம் போட்டீர்கள் என்றுசொன்னால் - சரிதான். அந்த கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியுள்ளது என்று உங்களுக்கு தெரியாது என்றுசொன்னால் - முழுமையாக தெரியாது, கைப் உடைந்திருந்தது என்று கூறினார்கள்.

**திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சிசொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**/Sd/ S.K.Angalaeswari**
**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**விருதுநகர்.**